மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No. 05/2020

2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி / பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோசஸ் ( PW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :<br>: | |

<u>நாள். 07.02.2023</u>
<u>வா.சா.1</u>
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 14.10.1956 ஜெபமாலை மகன் ஜேசு செபஸ்தியான் வாதிகளின் தகப்பனார் இன்னாசி முத்து அவரது அண்ணன் மோச்சானந்தம் அவர்களுக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.**1** ஆகும்.

2. 28.01.2020-ம் தேதி பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா (எண்ணம்-6) வா.சா.ஆ.**2** ஆகும்.

3. 08.02.2020-ம் தேதி நான் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் தாக்கல் செய்த கணினி நகல் வா.சா.ஆ.**3** ஆகும்.

4. 14.02.2020-ம் தேதி வழக்கறிஞர் முலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.**4** ஆகும்.

5. மேற்படி 20.02.2020-ம் தேதி அறிவிப்பை பிரதிவாதிகள் வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்ட பதிவு தபால் (எண்ணம்-6) வா.சா.ஆ.**5** ஆகும்.

6. 20.02.2014-ம் தேதி எனது அண்ணன் மரிய வின்செண்ட் மற்றும் பெரியப்பா மோசானந்தம் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா அசல் வா.சா.ஆ.**6** ஆகும்.

7. 11.02.2021-ம் தேதி தாவா சொத்தினை பிரதிவாதிகள் அளந்து அடைக்கக்கூடாது என வட்டாட்சியருக்கு நான் கொடுத்த மனுவின் கை நகல் வா.சா.ஆ.**7** ஆகும்.

பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.